TAMIL NADU LEGISLATURE LIBRARY
28 NOV 1974
MADRAS.

தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

சனிக்கிழமை, 1974 மார்ச் 30.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

Apprentice Teachers

* 251 *Q.*—Thiru A. AYYANAN AMBALAM (on behalf of Thiru D. SANTOSHAM): Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether all the apprentice teachers appointed in the Corporation Schools in Madurai have been absorbed in regular vacancies; and

(*b*) if not, the details thereof and the reasons therefor?

தொழில் பழகும் ஆசிரியர்கள்

திரு. அ. அய்யணன் அம்பலம் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) மதுரை மாநகராட்சிப் பள்ளிகளில் நியமிக்கப்பட்ட தொழில் பழகும் ஆசிரியர்கள் அனைவரும் முறையான காலியிடங்களில் அமர்த்தப் பட்டுள்ளனரா?

(இ) இல்லையெனில். அதன் விவரங்கள் யாவை? அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) தொழில் பழகு ஆசிரியர்களாக மதுரை மாநகராட்சிப் பள்ளிகளில் பணியிலிருந்தவர்கள் பி.டி. ஆசிரியர்கள் நால்வர், செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் 40; ஹையர் கிரேடு ஆசிரியர்கள் 9. அவர்களுள் பி.டி. ஆசிரியர்கள் நால்வரும் 1972-73

முதலே முறையாக பதவிகளில் அமர்த்தப்பட்டு விட்டனராம். மற்ற 49 ஆசிரியர்களுக்கும் 11—9—1973 முதல் 'ஐந்து லட்சம் பேருக்கு வேலை' திட்டப் பதவிகள் அளிக்கப்பட்டு அவர்கள் அந்நாள் முதல் முழுச் சம்பளம் பெற்று வருகின்றனர்.

Provident Fund.

* 252 *Q.*—THIRU V. VENGA (on behalf of THIRU M. SANKARALINGAM): Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether any complaint has been received that the concession allowed to the 'A' Wing teachers in the matter of Part Final Withdrawal from the Provident Fund is denied to the 'B' Wing teachers; and

(*b*) if so, the action taken thereon?

சேம நல நிதி

திரு. வி. வெங்கா (திரு. எம். சங்கரலிங்கம் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சேம நல நிதியிலிருந்து பகுதி இறுதித் தொகையை ஆசிரியர்கள் பெறுவதில் 'ஏ' பிரிவு ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் சலுகை 'பி' பிரிவு ஆசிரியர்களுக்கு மறுக்கப்படுவதாக புகார் ஏதும் வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) புகார் எதுவும் வரவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Accommodation in the Government Colleges for conducting classes

* 253 *Q.*—THIRU L. BALARAMAN: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that the Government colleges in Cuddalore and Vellore do not have sufficient accommodation to conduct the classes; and

(b) whether it is a fact that there are no Lecturers for certain subjects?